1973 நவம்பர் 21]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சிறுவாணி நீர் ஒப்பந்தம் எத்தனை ஆண்டுக் காலத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 99 ஆண்டுக் காலத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் முழு அளவில் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

## திருப்பூருக்கு குடிநீர் வழங்கல்

***261 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேலும் ஓர் குழாயின் மூலம் மேட்டுப்பாளையத்திலிருந்து குடி தண்ணீரை திருப்பூர் நகருக்குக் கொண்டு வரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சியில் 2 லட்சம் மக்களுக்குத் தலைக்கு 115 லிட்டர் (25 காலன்கள்) வீதம் தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நலமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சு. துரைசாமி :** இங்கு கடந்த பல்லாண்டுக் காலமாகக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. திருப்பூரில் மக்கள் எண்ணிக்கை 1981-ம் ஆண்டு கணக்குப்படி 81,000 பேர் இருக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது கிட்டதட்ட 1½ லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. அது தொழில் நகரமாகவும் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பல்லாண்டுக் காலமாகக் கோரிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். முதல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 1963-ம் ஆண்டு பல்லாண்டுக் காலமாக

TRUTH ALONE TRIUMPHS

என்று பொதுவாகச் சொல்லுவது இப்படிப்பட்ட பிரச்சினையில் சரியானது அல்ல. இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக மக்கள் தொகை மிகுதிப்படுவதை மனத்தில் கொண்டு ஆலோசிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றபடி தண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு நிதிநிலை வசதி கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

### ஈழுவர் வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை

*** 262 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எழுவர் (ஈழுவர்) என்ற வகுப்பினர்களுக்கு பின்தங்கிய வகுப்பினர் என்று ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தக் கல்வி ஆண்டில் அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் வருவதில்லை என்று ஸ்காலர்ஷிப் பணம் கொடுப்பது நிறுத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** ஆம்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் நலக்குழு பிற்பட்ட வகுப்பினர் பட்டியலினைத் திருத்தி அமைத்ததுக்கான பரிந்துரையில், 'எழவன்' என்ற சொல் கேரளாவிலுள்ள கள் இறக்குவோரைக் குறிப்பிடுகிற தாகையால், அதனை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கி விடலாமென பரிந்துரைத்தது. அரசு இதனை ஏற்றது. இருப்பினும், ஏற்கனவே உதவி தொகைப் பெற்று பயின்று வந்த மாணவர்களுக்குத் தங்கள் பயிற்சி ஒரு கட்டத்தில் முடியும்வரை (completion of course in one stage) உதவித் தொகை வழங்குமாறு ஆணையிட்டது. இதனல் ஒரு பயிற்சியில் முதன் முதலாகச் சேர்ந்து உதவித் தொகைக்கு விண்ணப்பித்து கொள்ளும் மாணவர்களின் கோரிக்கைகளே நிராகரிக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் அப்படி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 51.